

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2025) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சென்னை, கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, நில நிர்வாக ஆணையர் கே.எஸ். பழனிசாமி, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, பி. முருகேஷ், இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (01.11.2025) தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் கிண்டியில் 118 ஏக்கர் பரப்பில் மாபெரும் சுற்றுச்சூழல் பூங்காவில், முதற்கட்டமாக நீர்நிலைகளின் கரைகளை சீரமைக்கும் பணிகள், அரியவகை மரங்கள், அழகிய மலர்ச் செடிகள் நடவு செய்தல் மற்றும் நாற்றங்கால் பணிகள் ஆகியவற்றை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கணபதி, பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு. மகேஷ் குமார், இந்து குழும இயக்குநர் என். ராம், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில்

# ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எஸ்.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், நவ, 3–

முதலமைச்சர் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அரியலூர் மாவட்டக் கழகத்தின் சார்பில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ ஆலோசனைக் கூட்டம் கழக சட்டத்திட்ட திருத்தகுழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் அன்னலட்சுமி ராஜ பாண்டியன் திருமண மண்டபத்தில் அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த BLA2, BDA (பூத் IT Wing) நிர்வாகிகள்,கழக ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் மண்டல பொறுப்பாளர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அண்ணன் கே.என்.நேரு, தமிழ்நாடு அரசு போக்கு வரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் ஆகியோர் கலந்து கொண்டு, வரவிருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் நாம் ஆற்ற வேண்டிய களப்பணிகள் குறித்தும், வாக்குச்சாவடி அளவில் கழகத்தை வலுப்படுத்துவது குறித்தும் சிறப்புரையாற்றி, ஆலோசனைகளை வழங்கினார்கள்.

**அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!**

அமைச்சர் கே.என். நேரு பேசியதாவது:

வாக்காளர் பட்டியலில் யாரை சேர்க்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதே அளவிற்கு யாரை சேர்க்கக்கூடாது என்பது முக்கியம் அதிமுகவிற்கு இருக்கும் ஒரே நம்பிக்கை ஒன்றிய அரசு நமக்கு எல்லாம் செய்து விடும் என்ற நம்பிக்கையை நாம் தகர்க்க வேண்டும் என நகராட்சி மற்றும் நிர்வாகத் துறை அமைச்சர் கே. என். நேரு தெரிவித்தார்.

மத்திய அரசு கொண்டுவந்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணியை ஆறு மாதத்திற்கு முன்பு செய்திருந்தால் நாம் எதிர்க்க போவதில்லை ஆனால் தேர்தலுக்கு மூன்று மாதங்களே இருக்கும் நிலையில் அவசரம் அவசரமாக இந்த பணிகளை செய்வதால் தான் அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை நமது முதலமைச்சர் கூட்டியுள்ளார் இக்கூட்டத்தில் கழகம் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் உள்ள சாதக பாதகங்களை எடுத்துக் கூறி ஆலோசனை நடத்த உள்ளார் எனவே வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்த பணியை தவறவிடாமல் சிறப்பாக பணியாற்ற வேண்டும் நகராட்சி பகுதிக்கு 2005 ஆண்டுக்கு முன்பிருந்த வாக்காளர்கள் ஊராட்சி பகுதிக்கு 2002 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த வாக்காளர்கள் அப்படியே இருப்பார்கள் இது அரியலூர் மாவட்டத்தில் 57 சதவீத வாக்காளர்களாக உள்ளனர் மீதமுள்ள 45 சதவீத வாக்காளர்களை தான் நாம் சரி பார்க்க வேண்டும். இதில் வாக்குச்சாவடி முகவர்களின் பங்கு முக்கியமானதாகும். இதில் யாரை சேர்க்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதே போல் யாரை சேர்த்து விடக்கூடாது என்பது முக்கியம். இதில் கவனமாக இருக்க வேண்டும் வட மாநில தொழிலாளர்களுக்கு ஓட்டை கொடுங்கள் என்று சொன்னால் அது சரியாக இருக்காது சிறுபான்மையின மக்கள் நமக்கு அதிகமாக வாக்கு அளிக்கிறார்கள் எனக் கூறி வாக்காளர் பட்டியலில் சேர்க்க தவறுவதை நாம் விடக்கூடாது. இப்பணியை அனைத்து அணி பொறுப்பாளர்களும் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும். இதை சிறப்பாக மேற்கொண்டால் வரும் தேர்தலில் நாம் வெற்றி பெற்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் பதவி ஏற்பார். யார் இருக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமோ அதேபோல் யார் இருக்கக் கூடாது என்பதும் முக்கிய பணியாக இருக்க வேண்டும். திமுக கூட்டணி உடைந்து விடும் என எடப்பாடி பழனிச்சாமி கூறி வருகிறார். நமது கூட்டணி உடையாது. ஆனால் அதிமுக கூட்டணியில் இருந்த பாமக டிடிவி தினகரன் ஓபிஎஸ் உள்ளிட்ட பலர் வெளியில் வருகிறார்கள் அவர்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை ஒன்றிய அரசு நமக்கு எல்லாம் செய்து விடும் என நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நம்பிக்கையை வீணடிக்க வேண்டும் என்று சொன்னால் ஓட்டு சேகரிப்பில் தீவிரமாக இருக்க வேண்டும். வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தத்தில் நாம் அனைவரும் இன்னும் ஒரு மாதத்திற்கு தீவிரமாக பணியாற்ற வேண்டும் எனக் கூறினார்.

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பேச்சு!**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசியதாவது:

ஒன்றிய அரசு SIR என்கின்ற பெயரில் மேற்கொள்ளும் இந்த பணிக்கு கட்சி நிர்வாகிகளை ஒன்றியநகர கிளை அளவில் தயார் செய்வதற்காகவே இந்த ஆலோசனை கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

பீகாரில் வாக்காளர் பட்டியல் சீரமைப்பு என்கின்ற பெயரில் 65 லட்சம் வாக்காளர்களை நீக்கி உள்ளனர். இது குறித்து இந்திய அளவில் போராட்டங்கள் நடைபெறுவதை பார்க்க முடிகின்றது. இன்று மோடி தலைமையிலான பாஜக விரைவில் தேர்தலை சந்திக்க உள்ள 5 மாநிலங்களுக்கு இந்த SIR என்கின்ற தேர்தல் பட்டியல் சீர்திருத்தத்தை தேர்தல் மூலமாக அறிவித்துள்ளது.

இதன் மூலம் பாஜகவே, தனக்கு எதிரான ஓட்டுகளை நீக்கி வெற்றியை பெறலாம் என்கின்ற முயற்சியில் இறங்கி உள்ளது. அதற்கு நாம் இடம் கொடுக்காமல் இந்த பணியை எவ்வாறு மேற்கொள் வேண்டும் என்பதற்காக இந்த கூட்டத்தை கூட்டி உள்ளோம். நம்முடைய கழகத் தலைவர் அனைத்து கட்சி கூட்டத்தையும் கூட்டி உள்ளார். கழகத்தின் சார்பில் நாம் மேற்கொள்ள வேண்டிய பணியை மிக முக்கியமாக புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய கழகத் தலைவர் நம்மை தொடர்ந்து தேர்தல் பணிக்காக தயார் செய்து கொண்டுள்ளார். ஏற்கனவே ஓரணியில் தமிழ்நாடு என்ற அளவில் ஒவ்வொரு வீடாக சென்று நாம் இங்கு இருக்கக்கூடியவர்களை கழகத்தில் இணைத்து இருக்கிறோம். தற்போது ஒவ்வொரு வீட்டிலும் யார் உள்ளனர் என நமக்கு தெரியும். நமது மண்டல பொறுப்பாளரால் தரப்பட்டுள்ள கையேட்டில் யார் யாருக்கு வாக்கு உள்ளது என்பதை குறித்துள்ளோம். வெளிமாநிலத்தவர்கள் எந்த வீட்டில் உள்ளனர் என நமக்கு தெரியும். இன்னும் மீதமுள்ளவற்றையும் உடனடியாக நாம் செய்து விட்டோம் எனில் இந்த SIR திருத்த பணியை எதிர்கொள்ள உதவும்.

இந்தப் பணியை நாம் தீவிரமாக மேற்கொண்டால்தான் எதிர் காலத்தில் தேர்தலை சந்திக்க உதவியாக இருக்கும் 2002 ஆம் ஆண்டு உள்ள வாக்காளர் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுதான் தற்போது வாக்காளர் பட்டியல் சேர்த்த திருத்தத்தை மேற்கொண்டுள்ளனர்.

அந்தப் பணியை நாம் எப்படி மேற்கொள்ள வேண்டும் என்பதை எடுத்துக் கூற மண்டல பொறுப்பாளர் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு வந்துள்ளார். அவர் கூறுவதை கேட்டு தம்முடைய பகுதிகளை அந்த பணிகளை மிகத் தீவிரமாக மேற்கொண்டு நமக்கான வாக்குகளை உறுதியாக வாக்காளர் பட்டியலில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் அதன் மூலம் நம்முடைய வெற்றியை உறுதி செய்ய முடியும் என கேட்டுக்கொள்கிறேன் என கூறினார்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ. க.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்ரமணியன், குன்னம் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் ஏ.கே.அருண், அரியலூர், செயங்கொண்டம் தேர்தல் பொறுப்பாளர் அன்பரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, ஒன்றிய பொறுப்பாளர்கள் தனசேகர், இரா.கென்னடி, பூ.செல்வராஜ், கோ.அறிவழகன், மா.அன்பழகன், இரா.மணிமாறன், ரெங்க.முருகன்,

அசோகசக்ரவர்த்தி,ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், தனவேல், இரா.அண்ணாதுரை, தெய்வ.இளையராஜா,பொன். செல்வம், நா.கணேசன்,அருண், இ.பி.ஆர்.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் ப.கோபாலகிருஷ்ணன், அல்போன்ஸ், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி. லூயிகதிரவன், எஸ்.ஆர்.இராமராஜன், குலோத்துங்கன், பானுமதி இராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.பாலு,சி. ஆர்.எம்.பொய்யாமொழி, ஆர்.எம்.அன்பழகன், வி.எம்.ஷாஜகான், சுபி கருணாநிதி, மற்றும் அரியலூர், ஜெயங்கொண்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த BLA2, BDA (பூத் IT Wing) நிர்வாகிகள்,கழக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து அணி நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய,நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி அமைச்சர் பி.கே.சேகர்பாபு பருவமழையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும். கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி திரு.வி.க. நகர் மண்டலம். வார்டு65க்குட்பட்ட சிவசக்தி நகர். மகாத்மா காந்தி நகர், கண்ணகி நகர் மற்றும் வினோபா நகர் ஆகிய பகுதிகளில் சாலை வசதி. குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் பணி, கழிவுநீர் கால்வாய் அமைத்தல், தெரு விளக்குகள் கூடுதலாக அமைத்தல் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவது தொடர்பாக நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பிரச்சனைக்கு தீர்வு காண ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. உடன் ஆணையர் ஜெ. குமரகுருபரன், மண்டலக் குழுத்தலைவர் சரிதா மகேஷ்குமார். அதிகாரிகள் எச்.ஆர். கௌஷிக், இராதாகிருஷ்ணன். பழநிவேலன், மாமன்ற உறுப்பினர் நாகராஜன் மற்றும் பலர் உள்ளனர்.

### துறைமுகம் தொகுதி – இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.4.49 கோடி மதிப்பில் புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடங்கி வைத்தார்!

*சென்னை, நவ.3*

*முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (01.11.2025) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி யின் மூலதன நிதியின் கீழ், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.*

*இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு-59ல், டி.என்.பி.எஸ்.சி சாலையில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி, வார்டு -57ல், வ.உ.சி. சாலையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி மற்றும் வார்டு-54ல், வால்டாக்ஸ் சாலை, திருப்பள்ளி தெரு எதிரில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.*

*இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் வார்டு 59 ஐசக் தெருவில் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் மற்றும் வார்டு55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் ரூபாய் 170 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டடத்தை மட்டும் இடித்து, தரைத்தளத்தில் புதியதாக 5 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்துடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூபாய் 4.49 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.*

*மேலும், அமைச்சர், அப்பகுதியில் உள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.*

*இந்நிகழ்வுகளின் போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் பி.ஸ்ரீராமுலு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) திருமதி.விமலா ராணி, உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் திருமதி கற்பகவள்ளி, உதவி கல்வி அலுவலர்கள் தணிகைவேலு, திருமதி வேதவல்லி, மாமன்ற உறுப்பினர்கள் ல.நவீன், வெ. பரிமளம், ராஜேஷ் ஜெயின் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

### தி.மு.க. இலக்கிய அணி

## மாவட்ட அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி – மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

**தலைவர்:-** என். தங்கவேல் 1/52, பூசாரிப்பட்டி அஞ்சல், பொள்ளாச்சி - 642205, திருப்பூர் மாவட்டம்.

**துணைத் தலைவர்–** தாரை. பி. சிவா 564, பழனி சாலை, வெஞ்சமடை, எஸ்.வி. மில்ஸ் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642128, திருப்பூர் மாவட்டம்.

**அமைப்பாளர்:–** க. சாமி 3/19, குருவப்பநாயக்கனூர், மானுப்பட்டி, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம்.

**துணை அமைப்பாளர்கள்:**1) பெ. பழனிச்சாமி 3/240, காமராஜ் நகர், சின்னாம்பாளையம், மாக்கினாம்பட்டி, பொள்ளாச்சி - 642003, திருப்பூர் மாவட்டம். 2)ஆர். ஜெகதீஸ்வரன் 2/158, மூங்கில்தொழுவு, மூங்கில்தொழுவு அஞ்சல், ஜக்கார்பாளையம் வழி, உடுமலைப்பேட்டை - 642202, திருப்பூர் மாவட்டம். 3) கே. தங்கான் 2/139, தேவநல்லூர் லட்சுமாபுரம் அஞ்சல், பொள்ளாச்சி - 642187, திருப்பூர் மாவட்டம். 4) கு. தம்பிதுரை 36/7, ஐஸ்வர்யா நகர், மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642113. 5) மு. யாசர் அராபாத் 6/25, வடக்கு தெரு, சோழமாதேவி, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை – 18
நாள்– 1.11.2025

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்,
தி.மு.க. இலக்கிய அணி



உடுமலை நகராட்சி தூய்மை பணியாளர்களுக்கான நலவாரிய அடையாள அட்டை மற்றும் நலத்திட்டங்களை வேலுச்சாமி தலைமையில் ஆணையாளர் ஜெ. வினாயகம் ஏற்பாட்டில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி நலவாரிய அடையாள அட்டைகளை வழங்கினார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி தொகுதியைச் சேர்ந்த தேவகி க/பெ.சந்தோஷ், காயத்திரி த/பெ.மாதவன், பவானி த/பெ.செல்வகுமார் மற்றும் ஷாலினி த/பெ.ஜெயம்புலிங்கம் ஆகிய நான்கு பெண்கள் சென்னை எண்ணூர் கடற்கரையில் குளிக்க சென்ற போது கடல் அலையில் சிக்கி இறந்தவர்களின் உறவினர்களை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சந்தித்து இறந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கி தேவையான உதவிகளை செய்வதாக டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ உறுதி அளித்தார். உடன் எஸ்.ரமேஷ், எஸ்.ராமஜெயம், எம்.கேசவன் அப்துல்கரீம், கே.வி.நாகராஜ், கஜேந்திரன் ஆகியோர் சென்றனர்.